بسم الله الرحمن الرحيم

# முஆத் இப்னு ஜபல் அறிவு மேம்பாட்டு மையம்

காலனி, துறையூர் மெயின் ரோடு, எருமப்பட்டி, நாமக்கல் மாவட்டம் - 637013

## 2023-ம் கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை

**அஸ்ஸலாமு அலைக்கும்,**

அன்புள்ள மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு முஆத் இப்னு ஜபல் அறிவு மேம்பாட்டு மையத்தினுடைய ஸலாத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம். 2023-ம் இக்கல்வியாண்டு முதல் **10** மற்றும் **12**-ம் வகுப்பு படித்து முடித்து பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் கல்லூரி கல்விக் கட்டணம் கூட செலுத்த வசதியில்லா நிலையில், மேற்கொண்டு உயர்கல்வி படிக்க ஆர்வமும் மற்றும் திறமையும் உள்ள **இரண்டு** ஏழை முஸ்லிம் மாணவர்களுக்கு **(ஆண்களுக்கு மட்டும்)** அவர்களின் உயர் கல்விக் கனவு மற்றும் அவர்களின் இலக்குகளை எளிதாக நிறைவேற்ற உதவும் வகையில், அவர்களுக்குத் தேவையான கல்லூரி கட்டணத்தை செலுத்த எங்கள் மையத்தின் மூலம் **உதவித்தொகை** அளிக்க முன்வருகின்றோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆகையால், இவ்வுதவித் தொகையினைப் பெறத் தேவையுடைய மாணவர்கள் அல்லது உங்களுக்கு தெரிந்த தகுதியுடைய மாணவர்களை கீழ்காணும் இணைப்பு / லிங்க் மூலம் விண்ணப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றோம். அல்லாஹ் இதன் மூலம் நம் அனைவர்களுக்கும் அருள் புரிவானாக!

**விண்ணப்ப இணைப்பு/லிங்க்:** https://www.mijkec.org/higher-education-scholarship-2023/

### தகுதி / நிபந்தனைகள்

- இத்திட்டத்தில் சேந்தமங்கலம், நாமக்கல், தொட்டியம், முசிறி & துறையூர் ஆகிய வட்டத்தைச் சேர்ந்த 10 & 12-ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.
- தகுதியுடைய ஏழை மாணவர்களின் கல்லூரி படிப்பிற்காக வேண்டி கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்கு மட்டுமே உதவித் தொகைகள் வழங்கப்படும் (கல்லூரி விடுதிக் கட்டணத்திற்கு உதவித் தொகைகள் வழங்கப்பட மாட்டாது).
- தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மாணவருக்கு அவர் கல்லூரி படிப்பு முடியும் ஆண்டுகள் வரை கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்காக வேண்டி நபர் ஒன்றுக்கு ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சமாக ரூபாய் 60,000/- (அறுபது ஆயிரம்) மட்டுமே வழங்கப்படும்.
- 10 & 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் இரண்டு மாணவர்களுக்கு மட்டுமே உதவித் தொகைகள் வழங்கப்படும்.
- முதல் பட்டதாரி மாணவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பட்டயப் படிப்பு (டிப்ளோமா) மற்றும் இளங்கலை (டிகிரி) படிப்புகளுக்கு மட்டுமே உதவித் தொகைகள் வழங்கப்படும்.
- உதவித் தொகைகள் படிப்பு முடியும் வரை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து பெற பருவத் தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பம் பதிவு செய்வதற்கான கடைசி நாள்: 20 ஜூன் 2023.
- தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள் உரியவர்களிடம் 15 ஜூலை 2023 -க்கு முன்பு தெரிவிக்கப்படும்.



**ஆன்லைனில் விண்ணப்பம் பதிவு செய்வதற்கு அருகில் இருக்கும் QR Code -ஐ ஸ்கேன் செய்யவும்!**

Scan Me

**மேலும் விபரங்களுக்கு:**


ஹாஜா மைதீன் : +91 9585453370

முஹம்மது ஆசிஃப் : +91 7010731381